*Subscription*
Inland: Rs. 50/- per year.
FOR ADVERTISEMENTS
*Apply to:*
The Manager,
Morning Star', Vaddukoddai.

# THE MORNING STAR

*Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No. QIJ/64/News/87*
Established: 1841: A Christian Weekly: Published Every Friday
Vol. 148 JAFFNA, FRIDAY, 15th JULY 1988. No. 15
RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

UNDELIVERED ISSUES
Please re address all undelivered issues of the Morning Star to:-
The Manager,
"Morning Star",
Vaddukoddai.

## William Wilberforce

**August 7th is "William Wilforce day**

William Wilberforce (1759 — 1833), was a philanthropist and advocate of the abolition of the slave trade. A native of Hull, he was educated at St John's College, Cambridge. In 1780 he became M. P. for Hull, later for Yorkshire and formed an intimate friendship with W Pitt whose devoted supporter he became. In 1784 — 5 he travelled on the continent Under the influence of his NT reading he was converted to Evangelicalism and determined to lead henceforth a strictly Christian liife. In this purpose he was guided by John Newton, who opposed his wish to take Holy orders and persuaded him to serve the cause of Christianity in Parliament, a voction for which he was particulary well fitted by his oratorical gitts. In 1787 he founded a society for the reformation of manners. About the sametime, under the influence of T Clarkson, he began to interest himself in the slave trade, which he determined to take up in Parliament. In 1 97 he settled at Clapham where he became a prominent member of the 'Clapham sect'. His Practical View of the Prevailing Religious System of professed Christians (1797) a call to take seriously the duties of a Christian, esp those of repentance and hatred of sin, enjoyed great popularity and established his reputation as the ackowledged leader of the Evangelical party. He contributed generously to the charities of Hannah More and helped in the foundation of the Church Missionary Society (1798) and the Bible Society (1803). Throughout these years the abolition of the slave trade continued to be his chief concern, and after many vicissitudes the Bill, which had repeatedly been refused passage in the Lords, finally became law in 1807 Later he supported the movement for the complete abolition of slavery, which was effected by the Emancipation Act of 1833, shortly before his death In 1813 he defended Catholic Emancipation; he also advocated the introduction of English Missionaries into India and long championed the cause of Sunday observance. In 1825 he resigned his seat in Parliament owing to failing health

W Wilberforce had four sons and three daughters. Henry William Wilberforce (1807 — 73), his youngest son, was received into the RC Church in 1850. From 1854 to 1863 he edited the Catholic Standard.

Oxford-Dict. — Xian Church.

## The North-East Methodist Synod

(By VICTOR S. KIRUPARAJ)

The North-East Methodist Synod held its two-day sessions at St Peter's Church, Jaffna, on Friday, 17th and Saturday 18th June 1988. The two day Conference chaired by the North-East Methodist Head, the Rev. T. Jeyaseelan, was attended by a little over 100 delegates the clergy and the laity — drawn from the ten Circuits spread far and wide over the north and east.

Elaborate arrangements were made by the Methodist community of St Peter's Church Jaffna. to accomodate not only the clergy and laity representing the Batticaloa, Chenkalady, Kallar, Kalmunai, Thirukovil, Mannar, Murungan, Trincomalee, Jaffna and Point Pedro circuits but also to look into all their comforts during the two-day stay in Jaffna.

By Thursday 16th evening, there was a flutter of activity in and around the Trimmer Hall Complex, where within the spacious, renovated Y. W C. A. structure, stream-lined to the occasion by the engineering division of the IPKF, the delegates settled for the evening in the quiet surrounding the LOCKWOOD HOUSE, the old imposing edifice, the CLOCK TOWER standing silent sentinel to the hubub of activities.

The Padre chairman, the Rev. T Jeyaseelan, the dashing cricketer cum athlete from Jaffna Central appeared to be holding the floor during the lunch recess on the first day, keeping those around amused with his 'tit-bits" and "rib-ticklers".

The ministerial session on Friday morning was followed by the Synod Session proper, for the clergy and the laity in the afternoon The Synod continued its deliberations on Saturday 18th morning.

In the afternoon, a public meeting was held at St. Peter's Church, presided over by the Chairman, the Rev. T. Jeyaseelan.

The chief guest was the Municipal Commissioner, Mr. C V K Sivagnanam In his simple, dired manner, he brought to light the suffering and hardships the Tamil community had undergone in the present set-up. He enumerated the causes that led to this impasse. "Whither are we heading!" he exclaimed He wound up by saying that it was through meditation that we could attain our goal. He also added that God, in his infinite mercies also guides and protects those who are fighting for a just cause

Mr. K. Manickavasagar enlightened those present with

## Wanted Trainee Nurses

**Green Memorial Hospital Manipay**
**Willies Pierce School of Nursing**

Applicants are invited to apply for the following courses.

1. General Nursing — Training period two years
2 Mid wifery — Training period three years.

*Qualification required:*

G. C. E. (O/L) — Credit passes in two of the following subjects: Tamil, English, Science, Maths, Health Science & Six passes.

Classes for General Nursing will commence in August. Mid wifery will commence in September. Date of closure of applications August 15, 1988

You are invited to the
Ordination to the Diaconate
of
**Mr. J. P. Sooriyakumar**
Worker — Cheddikulam, Konavil Churches.
**Mr. Earl P. Solomon**
Worker — Alaveddy, Sandilipay Churches.
and
**Mr. S. Pancharatnam**
Worker — Araly Church.
on Saturday the 13th August at 8.30 a. m.
at the Cathedral Church Vaddukoddai.
**Rt. Rev. D. J. Ambalavanar**
will officiate.

Secretary,
J. D. C. S. I.

*Review*

**St. Johns College Magazine**

Vol. LXXXIII — December 1987

After a lacerating year, culminating in three months of destruction and despair, St. Johns has emerged not with a stain but with the issue of an attractely got-up school magazine, dated December 1987.

The publication, however, does not fail to recollect the dark days of October, November 1987. Twentyeight shells out of some 200, lobbed over the area found their targets inside the premises of St Johns, damaging its hallowed memorial blocks some class rooms and claiming the life of the school ground boy.

It was a shattering experience. But as the pages and pictures of the magazine illustrate, through hectic changes at administration level (even the admistration of the Diocese), St. Johns rebounded steadily, the new replacing the old, and

facts and figures of the history of Methodist Institutions in the North, laying special emphasis to Rev. Peter Percival's persistent endeavour to create a CENTRAL and a VEMBADI, the continuity of life and traditions maintained zealously.

We congratulate the schoo on its publication and wish the school all success in all its endeavours.

— C. E. R.

## A Service of Thanksgiving

for the life and Ministry
of the late
**Rev. J. J. Ratnarajah**



will be conducted at
the C. S. I. Church, Manipay
on Sunday the 14th August
at 10.30 a. m.

you are cordially invited.

Secretary,
J D C S I

## J. I. C. C. F.

Senior Boys & Girls Camp
(Year 10 & Above)
Navajeevanam
September 9th, 10 & 11th

*For details:*

SECRETARY,
Vaddukoddai.

**Vice-Chancellor**

The Council of the University of Jaffna decided to send the names of Prof V K. Ganeshalingam. Dean of Faculty of Science, Prof S. Sivagnanasundram Dean of the Faculty of Medicine and Prof S. Thurairajah of the Open University to the University Grants Commission, which will appoint one of them Vice-Chancellor of the University of Jaffna.

# உதயதாரகை

UTHAYATHARAKAI

Estd. 1841.

கிரீஸ்தவ வார இதழ்.] [வெள்ளிதோறும் வெளிவருவது

நீதி ஜனத்தை உயர்த்தும்: பாவம் எந்தக்குலத்துக்கும் இழிவாம்

மலர் 148] 15-7-1988 [இதழ் 16

## இறைவனை விட்டு விடாதே!

ஆண்டவர் மீது உன் கவலையையும் போட்டு விடு. அவர் உன்னை ஆதரிப்பார் (சங்-54/22)

நமது குறிக்கோளை அடைவதற்காக நம்மால் இயன்ற வரை முயற்சி செய்து விட்டு என்றும் தம் மக்களுக்கு உதவத் துடித்துக் கொண்டிருக்கும் எல்லாம் வல்லவரின் உதவியில் என்றும் நம்பிக்கை வைக்க வேண்டும் என்பதை நாம் நினைவிற் கொள்ள வேண்டும்; என்னைத் திடப்படுத்துபவரிடத்தில் நான் அனைத்தையும் சாதிக்க முடியும் என்றார் தார்சு நகரைச் சேர்ந்த பவுல் அடிகள்

இறையுதவியும் மனித முயற்சியும் ஒருங்கே இணைந்து நின்று விந்தைக்குரியவற்றைச் செய்ய முடியும், மனிதனின் முயற்சியோடு மட்டும் உண்மையில் நன்மையானது எதையும் பெறமுடியாது. எந்தப் பறவை ஓர் இறக்கையைக் கொண்டு பறக்க முடியும்? அருந்திறல் பெற்ற ஓர் ஆங்கிலேய விமான ஓட்டியைப் பார்த்து, திடீர்த் தாக்குதல் நடைபெற்ற இத்தனை ஆண்டுகளாக அவரால் எவ்வாறு பாதுகாப்பாக இருக்க முடிந்தது என்று பிறர் கேட்ட போது பின் வருமாறு விடையளித்தார்.

"நான் ஊர்ந்து சென்ற விமானங்களைப் பற்றிய அனைத்தையும் தெரிந்து கொண்டேன். நான் ஒரு போதும் தேவையற்ற வாய்ப்புகளைத் தேடிச் செல்லவில்லை, இறை பராமரிப்பைச் சோதிக்க என்றும் நான் மறுத்திருக்கிறேன். நசுங்கும் நிலை ஏற்பட்டபோது, எந்தெந்த வழியாய் உதவி கிடைக்குமோ அதையெல்லாம் பயன்படுத்தினேன். மனித ஆற்றலால் இனி செய்யக் கூடியது எதுவுமில்லை என்று கண்ட பொழுது இம் மன்றாட்டை இறைவன்பால் எழுப்பினேன். ஓ இறைவா என்னால் முடிந்ததையெல்லாம் செய்து விட்டேன். இனி என்னால் செய்யக் கூடியது வேறு ஒன்றுமில்லை அருள் கூர்ந்து சக்காதனை ஏற்றுக் கொள்வீராக,"

நிச்சயமான சாவிலிருந்து எனது எண்ணற்ற, அடிக்கடி எடுத்துரைக்க முடியாத தப்பிப் பிழைத்தல்களின் இந்த இரகசியத்தை உங்களிடம் சொல்ல நான் உயிரோடிருக்கிறேன் என்பது, இறைவன் என்றும் என் மன்றாட்டுக்குச் செவி மடுத்தார் என்னும் உண்மையை எண்பித்துக் காட்டுகிறது

அதே முறையிலேயே இறைவன் நமக்கு அன்பு செய்வதால் நமது எல்லா விண்ணப்பங்களையும் கேட்பதில்லை உங்களுடைய சிறு குழந்தைகள் ஒரு கத்தியை வைத்து விளையாட விரும்பினால் நீங்கள் அவர்களை அனுமதிப்பீர்களாக? இல்லை, ஏன்? ஏனெனில் நீங்கள் அவர்களை நேசிக்கிறீர்கள்

ஒரு சிறுமி இருந்தாள். தன் தாய் அதிக காய்ச்சலால் படுத்த படுக்கையாகி விட்டாள் என்று கண்டதும் அதிகம் கவலை கொண்டாள் படுக்கைக்குச் செல்லும் நேரத்தில் அவள் முழந்தாளிட்டாள் நல்ல இறைவா, தாயின் உடல் வெப்பத்தை இன்மைக்குறி இலக்க நிலைக்குக் (zero) கொண்டுவா என்று ஆர்வத்தோடு மன்றாடினாள்.

இறைவன் அவளது மன்றாட்டைக் கேட்டிருந்தால் அவள் மகிழ்ச்சியாயிருந்திருப்பாளா?

இறைவன் ஒரு போதும் நம்மைத் தாழ்த்துவதில்லை. எசாயா ஆகமம் இயம்புகிறது. 'அவரே களைத்தவனுக்குப் பலம் தருகிறார், வலிமையும் சக்தியும் அற்றவர்க்கு அவற்றை ஊட்டுகிறார். இளைஞரும் சோர்ந்து போவார்கள். களைப்படைவார்கள். வாலிபர்கள் நோய்வாய்ப்பட்டு விழுவார்கள். ஆனால் ஆண்டவர் மேல் நம்பிக்கை வைப்பவர்கள் புதிய வலிமையைப் பெற்றுக் கொள்வார்கள். கழுகுகளைப் போல் இறக்கைகள் பெற்றுப் பறந்திடுவர். ஓடுவார்கள். ஆனால் களைக்க மாட்டார்கள். நடப்பார்கள். ஆனால் சோர்வடைய மாட்டார்கள் (எசா 40/29-22)

கடவுளின் திட்டங்களை நாம் கண்டு பிடிக்க முடியாமலிருக்கலாம். சில வேளைகளில் அவர் நம்மிடமிருந்து மிகவும் கடினமானவற்றை எதிர்பார்ப்பது போல தோன்றும், ஆனால் அவர் நம் மீது கொள்ளும் அன்பு கலந்த ஏக்கம் ஒரு போதும் குறைவாயிராது. இது எப்படி இருந்தாலும், எல்லா மனிதரும் அவருடைய மக்கள் அவர் நம் தந்தை, துன்பங்கள் இன்னல்கள் வழியாக இறைவன் நமது எதிர் காலத்தை உருவாக்குகிறார். நமக்கு மட்டும் பொறுமை இருந்தால், எல்லாவற்றிற்கும் மேலாக அவரில் நம்பிக்கை வைத்தால் அனைத்தும் நலமாயிருக்கும்.

உனது இன்னல் முற்றிலும் வெல்ல முடியாத ஒன்றாயிராது, ஏனெனில் கடவுள் உனது இன்னலை வெல்ல உனக்குப் புத்தொளியையும், புது வலிமையையும் தருகிறார். ஆண்டவர் என் வல்லமையையும் கேடயமுமாயிருக்கிறார்.

## அமெரிக்கன் மிஷனின் 175 வது நிறைவு

(முற்றொடர்)

ஆனால் ஹன்ற் போன்ற ஒரு சில மெய்யடியார்கள் கிறிஸ்தவத்திற்கு விசுவாசிகளாக இருந்ததோடமைமையாமல் கிறிஸ்தவஊழியத்திற்கும் தம் வாழ்வை அர்ப்பணித்தனர். செமினரியின் பழைய மாணவரான ஹன்ற் அவர்களுக்கு பிரித்தானிய அரசாங்கத்தில் சிறப்பான உத்தியோகங்கள் காத்திருந்தன. ஆனால் ஹன்ற் அவர்களின் மனம் சுவிசேடப் பணியையே நாடியது. கிறிஸ்தவ ஊழியனாகிய ஹன்ற் அவர்கள் 1855 ம் ஆண்டு போதகராக அபிஷேகம் பண்ணப்பட்டார். அன்று தொட்டு சாவகச்சேரித் திருச்சபையை வளர்ப்பதிலேயே தன் கவனம் முழுவதையுஞ் செலுத்தினர்.

### தென்மராட்சியின் தலைவன்

ஹன்ற் போதகர் சாவகச்சேரியின் மதகுருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டபின் தென்மராட்சியின் அரசியல், பொருளாதார, சமுதாய வளர்ச்சியில் தீவிர கவனஞ் செலுத்தினர். கிறிஸ்தவன் சமுதாயத்திலிருந்து ஒதுங்கி வாழக் கூடாது, சமுதாயத்தை வளர்ப்பதில் தீவிர கவனஞ் செலுத்த வேண்டும் என்பது இவரின் தலையாய சிந்தனை.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் ஆசிரியராகவிருந்த பொழுதும் (1972—1880) தென்மராட்சியையே அவர் மனம் சிந்தித்துக் கொண்டு இருந்தது. அமெரிக்கன் மிஷனரி மாராகவிருந்த லீச் குடும்பத்தினருக்கு அவை கூறியவார்த்தைகள் எம் முள்ளத்தைத் தொடுகின்றன.

"நான் வட்டுக்கோட்டைக் கலாசாலையின் உபாத்தி வேலையை விட்டு, விசாரிப்பாரற்று, உதவி புரிவாரின்றி இருக்கும் இக் கிழக்கு நாட்டில் தேவனுடைய இராட்சியத்தின், வேலையைச் செய்ய வந்திருக்கிறேன். இத் தேசத்துக்கு நன்மை செய்ய வந்திருக்கும் நீங்கள் இந்தக் கிழக்குப் பாகத்தில் என்ன செய்ய விரும்புகிறீர்கள்)

ஹன்ற் போதகர் சாவகச்சேரி மீது கொண்ட அன்பினால் டிறிபேர்க் ஆங்கில பாடசாலை அங்கு உதயமானது. டிறிபேர்க் என்னும் ஆங்கில நீதிபதி அப்பாடசாலை கட்டுவதற்கு ஐந்நூறு ரூபாய் கொடுத்தமையால் அந்நீதிபதியின் பெயர் அப்பாடசாலைக்குச் சூட்டப்பட்டது.

(தொடரும்

---

"என் இதயம் அவர் மீது நம்பிக்கை அக்களிக்கின்றது. இன்னிசை பாடி அவரைப் புகழ்கின்றேன்" தாவீதாசர் பண்ணிசைத்தார். (சங்.37 i 7)

நிறை அன்பு அச்சத்தை அகற்றுகிறது என்று விவிலியம் பகர்கிறது. கலனைப் பற்றி நாம் கவலைப்பட்டுக் கொண்டிருந்தால் அல்லது கற்பனையான ஆபத்தைப் பற்றிக் கலங்கினால் நாம் அந்த நிறைவுடைய அன்பைப் பெற்றிருக்கவில்லை என்பதற்கு அஃது ஓர் அடையாளமாகும். இறைவனின் பராமரிப்பில் ஒரு குழந்தைக்குரிய நம்பிக்கை தலை சிறந்த மாற்று மருந்தாகும். கலக்கத்திற்குத் தடுப்புச் செயலாகவும் இருக்கிறது.

'உம்மில் நான் நம்பிக்கை வைக்கிறேன். உனது அனைத்து ஆற்றல்களோடும் ஓர் உதவியற்ற வறிய நான் உமது ஆடையின் விளிம்பைப் பற்றிக் கொள்கிறேன்.

எனது ஆற்றல் செலவழிந்தது துக்காவாகிய நான் கூறுகின்றேன். இப்போது உம் மீது இப்பணியைச் சுமர்க்கிறேன்'

— துக்காராம்

ஒரு புறா தன் பெடையோடு ஒரு மரக்கிளையில் அமர்ந்திருந்தது. அங்கு ஒரு வேடன் குறிபார்த்துக் கொண்டிருந்தான். ஒரு பருந்து தலைக்கு மேலே பறந்து கொண்டிருந்தது. அங்கு நம்பிக்கையே இல்லை 'நமது முடிவு நெருங்குகிறது' என்று ஆண் புறா பெண் புறாவிடம் சொன்னது. ஆனால் பின்னர் ஒரு பாம்பு வேடனைக் கடித்து விட்டது. இரு பகைவர்களும் இப்போது கொல்லப்பட்டு விட்டனர். ஆண் புறா பெண் புறாவை நோக்கி. இறைவனின் வழிகள் எத்துணை வியப்புக்குரியவை என்று மொழிந்தது.

மூலம்: "ஒளிமயமான எதிர்காலம்" அனுப்பியவர் ஜெ கீதாஞ்சலி

---

### உதவிக்குரு அபிஷேகம்

செட்டிகுளம், கோறளை திருச்சபைகள் ஊழியன்

திரு. ஜே. பி சூரியகுமார்

அளவெட்டி, சண்டிலிப்பாய் திருச்சபைகள் ஊழியன்

திரு. ஏர்ள் பி, சொலமன்

அராலித் திருச்சபை ஊழியன்

திரு. எஸ். பஞ்சரத்தினம்

ஆகியோர்

ஆகஸ்ட் மாதம் 13ம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு வட்டுக்கோட்டைப் பேராலயத்தில் அத்தியட்சர் மகாகனம் டி. ஜே. அம்பலவாணர் அவர்களினால் உதவிக் குருமாராக அபிஷேகம் பண்ணப்படுவர் உங்கள் ஜெபங்களும் பிரசன்னமும் வேண்டப்படுகின்றன

செயலாளர்
J. D. C. S. I.

---

### பிள்ளைகள் விழா

தென்னிந்திய திருச்சபை யாழ். அத்தியட்சாதினத்தின்

## பிள்ளைகள் விழா

ஆகஸ்ட் மாதம் 6ம் திகதி சனிக்கிழமை மானிப்பாய் மெமோறியல் பாடசாலையில் முழுநாள் விழாவாக நடைபெறும்

சமயக் குழு இயக்குனர்

**தாரகை ஒளி**

மனிதனின் பேச்சுகள், அவனின் எண்ணங்களையும் மிஞ்சி விடுகின்றன.

# எங்கள் கருத்து

## விடியுமா நமக்கு?

"பல்லாண்டு பல்லாண்டு
பாலைவனம் போல் இருந்தது
எல்லாமும் இழந்து வரும்
இஸ்ரவேலே வாழவைப்பாய்"

—கண்ணதாசன்

இயேசுக்கிறிஸ்து பிறந்த காலத்தில் இஸ்ரவேல் மக்கள் இருந்த மனோ நிலையிலே தான் இன்று இலங்கையிலுள் சகல மக்களும் இருக்கின்றனர்.

தென் மகாணத்தில் பயங்கரவரதம் உச்சக்கட்டத்தை அடைந்திருக்கின்றது. மக்கள் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர். பயங்கரக் கொள்ளைகளும் மூர்க்கத்தனமான கொலைகளும் தினசரி நிகழ்ச்சிகளாகி விட்டன.

வடமாகாணத்திலும் கீழ் மாகாணத்திலும் சமாதானத்தையும் நிம்மதியான வாழ்வையும் அனுபவித்துப் பல வருடங்கள் ஆகிவிட்டன. பதினைந்து வயதிற்கு உட்பட்ட சிறுவர் சிறுமிக்கு சமாதான, சுபீட்ச வாழ்வு என்றாலே என்னவென்று தெரியாத சோக நிலை உருவாகியிருக்கிறது. ஹெலிக்கொப்டர்கள் குண்டு வீசும் விமானங்கள், இயந்திரத் துப்பாக்கிகள், தாங்கிகள், ஷெல்லடிகள் எல்லாவற்றையும் சிறு வயதிலேயே தாராளமாகப் பார்த்திருக்கின்றனர். ஆராய்ச்சிகள், கலைவிழாக்கள், அறிவியற் கூட்டங்கள், சொற் பொழிவுகள் எல்லாம் நமது பிரதேசத்தில் அருகிவருகின்றன.

ஒரு முறை யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த "கல்வி" ஆசிரியர் கிருஷ்ண மூர்த்தி, யாழ்ப்பாணம் தமிழ்ப் பண்டிதர்கள் நிறைந்த நாடு என்றும், ஒருவன் தடக்கி விழுந்தாலும், ஒரு தமிழ்ப் பண்டிதர் மீது தான் தடக்கி விழுவான் என்றும் எழுதி வைத்தார். ஆனல் இன்று ஒருவன் தடக்கி விழுந்தாலும் ஒரு துப்பாக்கி மீது தான் தடக்கி விழுவான் என்ற நிலை உருவாகியிருக்கிறது.

மீன்பிடி, விவசாயம், கைத்தொழில் என்பன சீரழிந்து போய்க் கொண்டிருக்கின்றன. ஈழநாட்டு மக்கள் வறுமையின் கோரப்பிடிக்குள் சிக்கி விடும் நாள் அதிக தூரத்தில் இல்லை எனலாம்.

இன்பம் என்ற சொல்லைக் கேட்டதுண்டு
அது என்றுவது எங்கள் வீட்டுப் பக்கம் வந்ததுண்டோ

என்ற சோக நிலையில் பெருமூச்சுடன் தமது வாழ்வைக் கழித்து வருகின்றனர்.

இந்த அவலத்தினலே பெருந் தொகையான தமிழ் மக்கள் சொந்த நாட்டைவிட்டு நீங்கி ஐரோப்பா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா முதலிய நாடுகளுடன் சங்கமமாகி விட்டனர். அவர்கள் தமிழர்களாகத் தமது வாழ்க்கையை முடித்தாலும், அவர்களின் பிள்ளைகள், அந்நிய மொழிகளையே பேசப் போகின்றனர் என்பது உறுதி.

நமது நிலைமை நாளுக்கு நாள் சீரழிந்து கொண்டே போகின்றது. இதனைக் குறித்துக் கவலைப்படாத எந்தத் தமிழ் மகனும் இருக்க முடியாது.

அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீரன்றே
செல்வதைத் தேய்க்கும் படை

என்று வள்ளுவப் பெருந்தகையும் கூறி வைத்தார்.

இந் நிலையில் நாம் என்ன செய்ய முடியும்? வறுமையையும் அந்நியர் ஆட்சியும் இஸ்ரவேல் மக்களை வாட்டிய பொழுது அவர்கள் ஒரு மேசியா வாக்காத்திருந்தனர். ரோமரோடு ஒத்துழைத்தால் என்ன என்றனர் சதுசேயர். ரோமரை சாத்வீகமாக எதிர்த்தனர்; பரிசேயர். ரோமருக்கு எதிராக வாளேந்திப் போராடினர், செபோத்தேயர் அன்னாள், சிமியோன், மரியாள் போன்ற பக்தர்கள் இறைவனே தமக்குச் சமாதானத்தைத் தர வேண்டுமென்று ஓயாது ஜெபம் பண்ணினர்.

இன்று திருச்சபையாக ஈழம் ஆறுதல் பெற என்ன செய்ய முடியும்? நமது மக்கள் நிம்மதியாக வாழ ஒரு வழி ஏற்படமாட்டதா? சென்ற வருடம் நமது விக்கினங்கள் யாவும் தீர்ந்து விட்டன என்று உறுதியாக நம்பினோம் 1987ம் ஆண்டு ஜூலை மாதம் 29ம் திகதி ஏற்பட்ட இலங்கை இந்திய ஒப்பந்தம் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டது என்று பலர் நம்பினர். ஆனல் சிங்கள அரசு வழமை போல் அதனையும் நிறைவேற்றுமல் தட்டிக் கழித்து வருகின்றது. அவர்களைத் தட்டிக் கேட்க இந்திய அரசு தயங்குகின்றது. இதனல் அல்லல் படுபவர்கள் தமிழ் மக்களேயாவர். இனி நடக்கப்போவதனை யார் அறிவர் ?

தினம் வேலையுண்டு
குல மானமுண்டு
வருங்கால முண்டு
அதை நம்பிடுவோம்

## நமது இளைஞரும் போதைப் பொருட் பாவனையும்

(முற்றொடர்)

சமுதாயத்தில் மதிப்பு இல்லாது போய் விடக்கூடிய நிலையேற்படும். மலச்சிக்கல் போன்ற நோய்களுண்டாகி சாதாரணமனிதனாக இருக்க முடியாது. குதிக்காலை நிலத்தில் ஊன்றி நடக்க முடியாமல் ஒரு நிலை வந்த பின்பு நடக்கக் கூட பலமற்றுப் போய் விடக்கூடும். போதைப் பொருட்களைப் பற்றி வேதாகமம் கூறுவதென்ன? என்பதனை நோக்குமிடத்து லோத்தும் மகள் பரிமானதும் சம்பவம் ஆதி 19: 32-35 வரை கூறப்பட்ட முதல் சம்பவமாகும். கடவுளின் சாயலாகப் படைக்கப்பட்ட மனிதனில் இப்படியாக மதுவினல் பாவச் செயல் ஆரம்பமாகி இன்றும் ஒரு தொடர் கதையாகவே காணப்படுகிறது.

ஆசரிப்புக் கூடாரத்தினுள் பிரவேசிக்கையில் மது அருந்தக் கூடாது என லேவி 10:9ல் கூறப்படுகிறது. இஸ்ரவேலர் வனாந்தரப் பிரயாணத்தின் போது மது அருந்த வில்லை என உபாக 29:6ல் கூறப்படுகிறது. வனாந்தரத்தில் மது தயாரிக்க வசதியில்லாதிருந்தது ஒரு காரணமாயிருக்கலாம்.

தேவனுக்குரியவர்கள மதுபானம் அருந்தக்கூடாது என எண் 6:3; நியா 13: 4, 7, 14ல் கூறப்படுகிறது. மதுவினல் மயங்குகிறவன் ஞானவானல்ல நீதி 20:1 மதுபானத்தை விரும்புகிறவன் ஐசுவரியவானவதில்லை, நீதி 31:17 மதுபானப் பிரியருடன் சேரவேண்டாம் நீதி 23:20 மது ஆரம்பத்தில் மெதுவாய் இறங்கும் முடிவில் பாம்பைப்போலத் தீண்டும் நீதி 23:3132. மதுபானம் நியாயப் பிரமாணத்தை மறக்கச் செய்யும் நீதி 31:5. மது இருதயத்தை மயக்கும் ஓசியா 4:11. மதுபானத்தினல் அக்கிரமம் தோன்றும் ஆபகூக் 2:5, பாபிலோன் நகர மதுவை ஜாதிகள் குடித்து புத்தி மயங்கினர்கள் எரே 51:7. இதனல் அந்நகரம் விழுந்தது வெளி 14:8- மதுபானம் பாவியாதிருப்பது நலம் ரோம 14:21 மதுபானத்தினல் வெறிகொள்ளாதிருப்பது சிறந்தது எபே 5:18 கண்காணியானவன் மதுபானப் பிரியனாக இருக்கக்கூடாது தீத்து 11:7 1 திமோ 3;3 முதிர் வயதுள்ளவர்களும் மதுவுக்கு அடிமையாகப்படாது தீத்து 2:3 மதுவுக்கு அடிமையாதல் புறஜாதியாரின் வழமை 1 பேதரு 4:3 மதுவிற்கடிமையானவர்கள் அக்கினியினலும் கந்தகத்தினலும் வாதிக்கப் படுவார்கள் வெளி 14:10

வேதாகமத்தில் போதைப் பொருளாக மதுவையே குறிப்பிட்டுள்ளார்கள். ஒருவேளை ஏனைய போதைப் பொருட்கள் அக்காலப் பாவனையில் இல்லையோ நாமறியோம்.

இப்படியான பழக்கமுள்ளவர்களை கிறிஸ்தவ முறையின்படி கருணையுடன் நோக்கி இரக்கம் கொண்டு இதைப் பாவிப்பதற்கான காரணத்தை அறிய முற்படவேண்டும், அன்புடன் பிரச்சனையை அணுகவேண்டும். தகுந்த புத்திமதி கூறி வைத்திய ஆலோசனையை பெற வழிவகை செய்து கொடுக்கவேண்டும். இதனாலுண்டாகும் தீமைகள பற்றி துண்டுப் பிரசுரம், கருத்தரங்கு, சொற்பொழிவு' நாடகம் முதலியன மூலம் எடுத்துரைக்கவேண்டும்.

குடும்பங்களில் அன்பு நிலவ வேண்டும். பெற்றோர் சரியான முறையில் இருந்தால் பிள்ளைகள் கெட்டுப்போகமாட்டார்கள். சந்தர்ப்பமும் கிடையாது. பிள்ளைகள் மீது கடும் செல்லம், கவலையீனம் இருக்கக்கூடாது, அவர்களின் மீது அக்கறை காட்ட வேண்டும் பிள்ளைகளுக்குக் கல்வியில் கெட்டித்தனம் இல்லாது விடின் அவை கட்டாயமாகத் திணிக்கக் கூடாது. அவ்வகையான பிள்ளைகளினல் இயலக் கூடிய துறையில் முன்னேற சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும். மனிதப் பண்பு இருக்க வேண்டும். பிள்ளைகளின் குறைகளை மற்றவர்கள் சொன்னல் கோபிக்காமல் அதில் உண்மை இருக்கின்றதோ என அறிய முயல வேண்டும். பிள்ளைகளின் மீது அளவுக்கதிகமாக நம்பிக்கை வைக்கக் கூடாது. சிறு பராயத்தில் இருந்தே நீதி நூல்கள், நன்னெறிகள் போன்ற சிறந்த நூல்களை வாசிக்கப் பழக்க வேண்டும் போதைப் பொருட்களினல் ஏற்படும் தீமைகளை அறியச் செய்ய வேண்டும். பெரியார்களின் வாழ்க்கை வரலாறுகளை வாசித்து நாம் ஏன் இப்படியாக வர முடியாது என ஆர்வத்தைத் தூண்ட வேண்டும். இறை பக்தியுடன் வளர்த்தல் மிகவும் சிறந்தது.

### ஞாபகார்த்த ஸ்தோத்திர ஆராதனை

மறைந்து போன போதகர்
வண J. J. இரத்தினராசா
பேரில் ஒரு ஞாபகார்த்த
ஸ்தோத்திர ஆராதனை
ஆகஸ்ட் மாதம் 14ம் திகதி
ஞாயிற்றுக்கிழமை
காலை 10. 30 மணிக்கு
மானிப்பாய் சி. எஸ். ஆலயத்தில்
நடைபெறும்
நண்பர்கள் அன்புடன்
அழைக்கப்படுகின்றனர்.

செயலாளர்
J. D. C. S. I.

EDITORIAL

## A Tangled Web

The five-month Peace odyssey, undertaken by the Indian Intelligence officers of the Research and Analysis Wing (RAW), with the LTTE, ended on July 9, with a statement by the LTTE.

For purposes of record we quote below a relevant extract the statement (which we have taken from a national daily of Sri Lanka):—

"The enormous sacrifice made by the Tamil people and mastyrdom attained by the Tamil youth was not to effect a temporary merger and elections for powerless Provincial Councils. What is described as North and East is the motherland of Tamils and that is indivisible."

**Reactions in the South**

Caught in a cobweb situation, Sri Lankan political leaders and the people at large have reacted variously, the reactions ranging *from* a ritual refrain at official level of a continuance to invite the LTTE to the democratic processes, *to* fear and alarm of "the frightful implications" of the debacle which may, on the one hand step up Indian military pressure on Tamil areas or increase Indian pressure on the Sri Lankan government to improve the Devolution Package.

Telling it as it is, Rural Industries Minister, Saumiamoorthy Thondaman has come forward with a clear articulation of the causes of the political stalemate and the resulting confusion.

"The entire basis of the Sri Lankan Peace Accord is wrong ... One should never negotiate by proxy The Indian Peace Keeping Force now looks very foolish for having relied on Kittu. Negotiations should also be direct..... The IPKF came on a a mission of Peace to assist the Tamils. Is it now possible for them to fight to the last man? They also said that they were interested only in a negotiated settlement, and not in a military solution to the problem what will they do now?

**The Jaffna Tamils and PEACE TALKS**

Less abrasive but never happy about the 'talks', were the Jaffna Tamils living in the area directly targeted by the political cyclone. To them the Peace Talks have consistently missed the central issues between the LTTE and the government a cease-fire and an unconditional commitment of the government to the carving out of a Tamil homeland The July 9 Peace debacle did not come as a surprise to the northerner. But all the same, the situation epitomised once again turbid thinking on crucial issues, which made the military picture more positive. In fact, from July 10, army trucks in Jaffna moved along traditional routes with additional weapons of offence and defence and IPKF men consolidating their grip on their tentacles of power.

**The Truth**

But the truth was never at any time completely hidden from Indian statesmen or from world political analysts.

In an article entitled "*Indo-Sri Lanka Agreement: Regional Implications*", Dr. S. D. Muni Professor of South Asian Studies School of International Affairs of the Jawaharlal Nehru University, has in "Congress News" (The Journal of the Ceylon Workers Congress) as early as September 1987 predicted that LTTE is not likely to approve the "merger" subject to the Referendum to be held after one year. Said Dr. Muni in his article:—

"The promise of joining the North and Eastern provinces in one administration is indeed fragile. Because it depends upon the referendum which the Tamils cannot win and Jeyawardene has made no secret of this trap."

Dr. Muni added that the only tangible gain in the Agreement for the Tamils is the acceptance of Tamil as an official language. But this, he said, can hardly protect the Tamils from discrimination and disabilities. Now, in addition to what Dr. Muni had said the acceptance of Tamil as an official language is yet to pass the hurdle of Parliament.

All said the July 9 statement of the LTTE is by no means a surprise Everyone knew that it would eventually be a bad bridge which is shorter than the stream whether the 'bridge' is attempted to be constructed before the footlights of the world as at *Thimbu*, the capital of Himalayan Kingdom of Bhutan or in a calandestine fashion at New Delhi and Madras

**The Cease-Fire**

Getting into the sixth year of 'war' in the North and East of the man in the street has one overwhelming desire and that is for *a cease fire*, a state of activity in our land when people are not just at war

Grim statistics stare us in the face Within a space of nine months since October 1987 according to a Tamil daily, *73* Tamil youth have lost their limbs, Incapacitating them for life, *1039* women have been widowed, and *207* children orphaned. The total number of deaths during the period is *2381*.

At one stage during the Rhodesian crisis witchdoctors were it is said despatched to declare that the spirits were tired of blood and plead for a cease-fire.

In the North and East witchdoctors possibly do not exist nor are they necessary to carry this errand In continuing the 'war', and fighting the war to a finish of the risk to Indian servicemen and Tamil militants and civilians is great. But greater, by far is the risk to Indian credibility. The situation in the North and East entails more patience than military preparedness.

*Obituary*

*Mas. Rohan Gajanandan Thambiapillai*, who was knocked down by a C. T. B. bus died on Sunday 24th June 1988. The funeral took place at his house at 151, Hospital Road Jaffna on the following day. Rohan who was a student of Jaffna Central College met with this fatal accident at Chapel Street Jaffna. He was the youngest son of Mr. J. N. Thambiapillai of the C. T. B, Jaffna and Mrs. Meena Thambiapillai teacher, St. Charles M. M. V. Jaffna. Rohan had two brothers and one sister.

* * *

**Mr. Kandappu Thevananthan**

The funeral of *Mr. Kandappu Thevananthan*, Retired Government Servant, Pandateruppu took place on Wednesday the First of June. He was the husband of Lily and father of Mr. Yoganathan (District Judge) Thayananthan (United Electricals) and Dr. Lalananthan (U. K). The remains were removed to Pandateruppu Cemetery for interment.

* * *

**Mrs C. S. Ponnuthurai**

*Mrs. Violet Ponnuthurai* (nee Asirwatham) passed away on Friday the 6th July. She was the wife of the late Mr. C. S. Ponnuthurai former teacher of Jaffna College and the mother of Shanthi (U. K.) and Dr. Sarvanesan (Germany).

The funeral took place at her residence in Colombo on Monday the 9th July.

* * *

*Prof. A. Sathasivam* — Professor of Tamil University Peradeniya died of heart attack on Friday the First of July at his house at Araly. The funeral took ploce on Monday the 4th July at Tellipallai. Professor Sathasivan who is an old boy of Jaffna College was sixty two years old at the time of his death.



**Meditation**

### It is not Finished

It is not finished, Lord,
There is not one thing done;
There is no battle of my life
That I have really won

And now I come to tell thee
How I fought to fail.
My human all too human, tale
Of weakness and futility

And yet there is a faith in me
That thou wilt find in it
One wond that though canst take
And make
The centre of a sentence
In thy book of poetry.

I cannot read the writing of the years,
My eyes are full of tears,
It gets all blurred and won't make sense,
Its full of contradictions
Like the scribblings of a child

I can but hand it in and hope
That Thy great mind which reads
The writings of so many lives
Wilt udderstand this scrawl
And what it strives to say — but leaves unsaid
I cannot write it over, the stars are coming out,

My body needs its bed
I have no strength for more,
So it must stand or fall-dear Lord
That's all.

G. A. Studdert Kennedy
(Quoted by Bishop Lesslie Newbegin in "Unfinised Agenda,")

*Registered as a Newspaper at the G. P. O., Sri Lanka under No. QJ/64/News/87.*
Printed for the Jaffna Diocese of the Church of South India at Sri Sanmuganatha Press, Kankesanthurai Road, Jaffna on Friday, 15th July 1988 and published by Mr. Alvappillai Rajasingham, 330, Navalar Road, Jaffna